பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்,

சென்னை-6

ந.க. எண்.20811/சி1/இ2/2018, நாள்: 21.12.2022

----

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்விப்பணி - வழக்கு - சென்னை உயர்நீதிமன்றம் - மதுரைக்கிளை வழக்குகள் - W.P.(MD)Nos. 19438 and 19435/2019 - திரு. B.M. இரமேஷ்ராமன் மற்றும் திருமதி.N. ஜெயந்தி ஆகியோர் அரசாணை (நிலை) எண். 153, P & AR (FR.IV) Department, நாள்: 05.12.2007ன் படி incharge allowance 01.06.2019 முதல் கோரி தொடரப்பட்ட வழக்கு - 09.09.2019 நாளிட்ட தீர்ப்பு - தெளிவுரை வேண்டி அரசுக்கு கருத்துரு சமர்ப்பித்தமை - கூடுதல் விவரங்கள் கோரியது - சார்பு.

பார்வை:

1. சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளை வழக்கு W.P.(MD)Nos. 19438/2019, தீர்ப்பு நாள்: 09.09.2019.
2. சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளை வழக்கு W.P.(MD)Nos. 19435/2019, தீர்ப்பு நாள்: 09.09.2019.
3. அரசாணை (நிலை) எண். 153, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்ததத்துறை (FR.IV), நாள்: 05.12.2017.
4. திரு.B.M.இரமேஷ்ராமன், பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, மஞ்சுபுளிப்பட்டி, கரூர் மாவட்டம் கடிதம் நாள்: 27.10.2019.
5. அரசுக் கடிதம் எண். 27165/பக1(1)/2019-1 பள்ளிக் கல்வித்துறை, நாள்: 18.10.2019, 17.02.2020 மற்றும் 03.09.2021.
6. கரூர் முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண். 9634/ஆ1/2018, நாள்: .10.2019 மற்றும் 13.07.2020.
7. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி)ன் செயல்முறைகள் ந.க.எண்.20811/சி1/இ2/2018, நாள்.03.12.2021 21.06.2022. மற்றும் 15.09.2022

------

பார்வை 7ல் காணும் செயல்முறைகளின் மீது அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

கரூர் மாவட்டம், மஞ்சுபுளிப்பட்டி, அரசு உயர்நிலைப் பள்ளி, பட்டதாரி ஆசிரியர் திரு.போ.மா. இரமேஷ்ராமன் மற்றும் நச்சலூர் அரசு உயர்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியை திருமதி.என்.ஜெயந்தி ஆகியோர் அரசாணை (நிலை) எண். 153, P & AR (FR.IV) Department, நாள்: 05.12.2017 -ன் படி தலைமையாசிரியராக பொறுப்பு வகித்தமைக்கு கூடுதல் பொறுப்புப்படி (Additional Incharge Allowance) வழங்கிடக்கோரி தொடர்ந்த வழக்குகள் முறையே W.P.(MD) No. 19438 மற்றும் 19435/2019, ஆகியவைகளின் மீதான 09.09.2019 நாளிட்ட தீர்ப்பாணையின்படி ஆணை வழங்குவது குறித்தும் நிதியதிகாரத்துடன் கூடிய பொறுப்பு வகித்துள்ள ஆசிரியர்களுக்கு கூடுதல் பொறுப்புப்படி (Additional Incharge Allowance)

வழங்குவது குறித்தும் அரசிடம் தெளிவுரை வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டதில் பார்வை 5ல் காணும் 03.09.2021 நாளிட்ட அரசு கடிதத்தில் கீழ்க்காணுமாறு கூடுதல் விவரங்கள் கோரப்பட்டது.

1. முழுக்கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் கூடுதல் பொறுப்புப்படி அனுமதிக்கப்படும் நிலை இருப்பின் அதனால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம்.
2. முழு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ள மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் கூடுதல் பொறுப்புப்படி அனுமதிக்கப்படும் நிலை இருப்பின் அதனால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம்.
3. மாவட்டக் கல்வி அலுவலர் பணியிடங்களுக்கு முழு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் கூடுதல் பொறுப்புப்படி அனுமதிக்கப்படும் நிலை இருப்பின் அதனால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம்.

எனவே, அரசுக்கடிதத்தில் கோரப்பட்டுள்ள மேற்காண் விவரங்களை அடிப்படை விதி 49(1) (III)ன் படி துல்லியமாக கணக்கிட்டு உடன் இவ்வாணையரகத்திற்கு அனுப்பிவைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் பார்வை 7ல் காணும் செயல்முறைகள் மூலம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் நாளது தேதி வரை இப்பொருள் சார்பான விவரங்கள் கீழ்க்கண்ட முதன்மைக்கல்வி அலுவலர் தவிர எஞ்சிய முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து ஏதும் பெறப்படவில்லை. எனவே மேலும் காலதாமதம் ஏற்படுத்தாமல் மேற்காண் விவரங்களை அரசுக்கு அனுப்பிட ஏதுவாக இவ்வாணையரகத்திற்கு இச்செயல்முறைகள் பெற்ற உடன் அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(கன்னியாகுமரி, தூத்துக்குடி, கிருஷ்ணகிரி, தருமபுரி, புதுக்கோட்டை, திருச்சி, விழுப்புரம், திருநெல்வேலி, சிவகங்கை, விருதுநகர், திருப்பூர், அரியலூர், காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர் மற்றும் மயிலாடுதுறை).

<u>குறிப்பு:</u>

இராமநாதபுரம், தஞ்சாவூர் – தனித்தனியாக விவரம் இல்லை.

நீலகிரி – தொகை விவரங்கள் இல்லை

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

21/12/22

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

**11. சொந்த ஊர்**

(அ) பணி ஏற்கையில் பணிப்பதிவேட்டில் குறிப்பிட்ட மாவட்டத்தை மாற்ற முடியாது - (அ.ஆ. எண். 174, P&A.R. நாள் 19.2.85)

(ஆ) மாவட்டங்கள் புதியதாக உருவாக்குவதால் ஏற்படும் மாற்றங்களைப் பணிப்பதிவேட்டில் அலுவலகத் தலைவரே பதிவு செய்யலாம் (Note (9) in Annex II-Part III of Rules under F.R. 74(IV)).

**12. ஜாதி பெயர் மாற்றம்**

(அ) கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் பெற்றோரின் விருப்பப்படி அவர்களில் எவரேனும் ஒருவரின் ஜாதியை அக்குழந்தைகள் சார்ந்தவராகக் கொள்ளலாம். (அரசாணை எண் 477, சமூக நலத்துறை, நாள் 27.6.75)

(ஆ) ஜாதிப் பெயர் மாற்றம் செய்ய விரும்பினால் துறைத்தலைவர் வழியாக மாவட்ட ஆட்சியருக்கு மனு செய்ய வேண்டும். (அ.ஆ. எண். 125, நிர்வாகத் துறை நாள் 2.3.89) இருப்பினும் குறிப்பிட்ட ஒரு ஜாதியானது அரசு பின்தங்கியது என அறிவித்தால் எவ்வித மனுவும் பெறாமலேயே அலுவலகத் தலைவர் பணிப் பதிவேட்டில் பதிவு செய்தாக வேண்டும்.

(இ) தாயின் பெயரை முன்னெழுத்தாக போட்டுக் கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளது.

# IX. கூடுதல் பொறுப்பு (Additional Charge)

அடிப்படை விதி 49ல் குறிப்பிட்டது போல், பதவிகள் Independent ஆக இருந்தால்தான் கூடுதல் பொறுப்பு என கருதப்படும்.

முழுக்கூடுதல் பொறுப்பு 39 நாட்களுக்கு மேல் கூடுதல் பொறுப்பு வகித்தால் கூடுதல் சம்பளம் பெற தகுதி உண்டு. (அ.ஆ.எண். 122, ப.ம.நி.சீ. துறை (PR IV) நாள் 3.10.2011 நடைமுறை கூடுதல் பொறுப்பு என்பது கிடையாது.

கூடுதல் பொறுப்பு வகிக்கும் பதவிகள் வெவ்வேறு வகையாக இருந்து அவைகளின் செயல்பாட்டு எல்லையும் வேறாக இருந்தால் கூடுதல் சம்பளம் உண்டு. (விதி 49) ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளை கூடுதல் பொறுப்பு வகித்தாலும் ஒரு கூடுதல் பொறுப்பு பதவிக்கு மட்டும், கூடுதல் பொறுப்புப்படி கிடைக்கும்.,

அடிப்படை ஊதியம் மற்றும் பர்சனல் ஊதியம் மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். சிறப்பு ஊதியம் கிடையாது. (அ.வி. 49 (i)(b)(iv)ன் கீழ் உள்ள விளக்கம்)

ஒரிஜினல் மற்றும் கூடுதல் பணியிடம் இதில் எந்த பதவிக்கு வீட்டு வாடகைப்படி நகர ஈட்டுப்படி அதிகமாக வழங்கப்படுகிறதோ அதனை அனுமதிக்கலாம்.

முழு கூடுதல் பொறுப்பு சம்பளம், ஒரிஜினல் பதவியில் பெற்றுவரும் சம்பளத்தில் 1/5 பாகம் கூடுதல் பதவியின் குறைந்தபட்ச சம்பளத்தில் பாதி, இதில் குறைவோ அடித வழங்கலாம். இந்தக் கூடுதல் பொறுப்பு சம்பளம், காலவரை ஏதும் இல்லாமல் 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலருக்கு மட்டும் வழங்கலாம். (அ.வி.49(1)(iii)அ.ஆ.எண்.122 ப.ம.நி.சீ.துறை. நாள் 3.10.2010) மற்றும் (அ.ஆ.எண்.153, ப.ம.நி.சீ.துறை. நாள் 5.12.2017) கூடுதல் பொறுப்பு சம்பளம் C & D பிரிவு அலுவலர்களுக்கு கிடையாது.



**ஆசிரியர்களுக்கான ஈட்டிய விடுப்பு (T.N.L.R. II)**

(அரசாணை எண். 522 கல்வி E2, நாள் 24.6.94)

(1) அரசுப் பள்ளிகள் / நகராட்சிப் பள்ளிகள் / தனியார் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்துவகைப் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1996-97 கல்வி ஆண்டு முதல் ஆண்டிற்கு 17 நாட்கள் ஈட்டிய விடுப்பு வழங்கப்படும் (அரசாணை எண். 522, நாள் 6.8.96)

(2) ஈட்டிய விடுப்பினைக் கணக்கிடும் போது வரும் மீதியைத் தள்ளவோ அல்லது கொண்ணவோ செய்யாது. அப்படியே வைத்திருந்து அடுத்து வரும் காலத்தில் கணக்கிடும் போது, சேர்த்துக் கொள்ள வேண்டும். (அரசாணை எண். 1011, P&AR, நாள் 14.10.86)

(3) ஒவ்வொரு ஆண்டும் ஜூன் முதல் தேதியன்று ஈட்டிய விடுப்பு கணக்கில் 17 நாட்கள் சேர்க்கப்படும்.

(4) ஊதியமில்லா காலத்திற்கு விகிதாச்சார அடிப்படையில் ஈட்டிய விடுப்பு குறைக்கப்படும். ஊதியமில்லா விடுப்பு 12 நாட்கள் எடுத்தாலும் 1 நாள் ஈட்டிய விடுப்பு குறைக்கப்படும்.

(5) ஆசிரியர் தனது இருப்பில் அதிகபட்சம் 240 நாட்கள் மட்டுமே சேமிக்க முடியும். ஒரே சமயத்தில் 180 நாட்கள் மட்டுமே அனுபவிக்க முடியும். (அரசாணை எண். 999, P&AR, நாள் 30.10.987)

# X. படிகள் (Allowance)

**1. பொது**

(அ) வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற அனைத்துப் படிகளையும் கணக்கிட அடிப்படை ஊதியத்துடன் சிறப்பூதியம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் (எப்.ஆர். 9(21) மற்றும் அரசு கடித எண். 7/யூ.எஸ். (எ)178, நிதி நாள் 6.11.1978) 1.7.89 முதல் அகவிலைப்படி கணக்கிட சிறப்பூதியம் சேராது (அரசாணை எண் 666 நிதி நாள் 27.6.1989) (அ.ஆ.எண்.305, நிதி 13.10.2017)

(ஆ) கணவன், மனைவி இருவரும் அரசு ஊழியராக இருப்பின் இருவருக்கும் அனைத்துப் படிகளும் கிடைக்கும் (அ.ஆ. எண் 223, நிதி 8.6.1971)

(இ) விடுப்புக் காலத்தில் ஆறு மாதம் வரை படிகள் வழங்கப்படும். (எப்.ஆர். 44)

(ஈ) பணியேற்பிடைக் காலத்தில் இரு இடங்களில் எந்த இடத்தில் குறைவான படிகள் கிடைக்குமோ அது வழங்கப்படும் (அடிப்படை விதி 107)

(உ) தற்காலிகப் பணி நீக்க காலத்திலும் வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி முதலியவை கிடைக்கும். (அரசு கடித எண் 6/யூ.எஸ்.(எ) 78, நிதி (பி.சி.) 4.11.1978 அரசு ஆணை எண் 113, நிர்வாகம் நாள் 16.2.83 மற்றும் அரசு க.எண். 16680, நிர்வாகம், 83-2, நாள் 16.5.1983)

(ஊ) அலுவலர்கள் கூடுதல் பணி பார்ப்பதற்கான கூடுதல் ஊதியமும் அகவிலைப்படி கணக்கிட எடுத்துக் கொள்ளப்படும் (அரசு க.எண். 39349/படிகள் 1/89-4, நிதி, நாள் 20.9.1989)

ABSTRACT

Fundamental Rules – Rule 49 of Fundamental Rules - Making of Full Additional Charge arrangement – Amendment - Issued.

---

**Personnel and Administrative Reforms (FR-IV) Department**

**G.O.(Ms) No.153**

**Dated : 05.12.2017**
**ஹேவிளம்பி, கார்த்திகை–19**
**திருவள்ளுவர் ஆண்டு 2048**

**Read :**

1. G.O. (Ms) No. 349, P&AR Department, Dated. 24.03.1980.
2. G.O. (Ms) No. 1099, P&AR Department, Dated. 15.12.1987.
3. G.O. (Ms) No. 40, P&AR Department, Dated. 25.03.1999.
4. G.O.(Ms) No. 122, P&AR Department, Dated. 03.10.2011.

-------

**ORDER**:

The following Notification will be published in the **Tamil Nadu Government Gazette**:-

**NOTIFICATION**

In exercise of the powers conferred by the proviso to Article 309 read with Article 313 of the Constitution of India and all other powers hereunto enabling, the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the Fundamental Rules:-

2. The amendment hereby made shall come into force on the 5th day of December 2017.

**AMENDMENT**

In the said Fundamental Rules, in rule 49,-

(1) for the expression "one or more independent posts", the expression **"any one independent post, either under Government service or under foreign service on deputation, in addition to his regular post"** shall be substituted;

(P.T.O)

(2) for Clause (1) and the Explanations thereunder, the following Clause and Explanations shall be substituted, namely:-

"(1) (i) When a Government servant belonging to Group A or Group B, either permanent or officiating including a re-employed pensioner or a permanent employee of a local body, holding a temporary post or officiating in a post under Government is appointed to hold full additional charge of **a post,** additional pay shall be allowed only if the period of additional charge is more than thirty nine days. In computing the period of additional charge, holidays and casual leave should also be included.

(ii) No additional pay shall be granted for holding additional charge of current duties of **any post.**

(iii) Additional pay for holding full additional charge shall be granted at the rate of one fifth of the pay drawn in the regular post or half of the minimum pay of the additional post, whichever is less. The additional pay shall be sanctioned irrespective of the duration of the additional charge held by **Group – A and B officers only.**

(iv) In the case of a Government servant whose additional pay has already been authorised for payment, with reference to their respective officiating or substantive pay, no arrears of such additional pay shall be paid in pursuance of subsequent retrospective orders of confirmation, completion of probation or regularisation of services in the post held by him resulting in an increase of substantive pay or pay in the regular post. But such additional pay may be calculated and paid on the basis of such orders, if it has not already been authorised for payment.

(v) Additional pay shall be allowed to an officer holding a Government post when he is appointed to hold full additional charge of **another post under foreign service on deputation** and to an officer **under foreign service** holding full additional charge of **another post** in **another foreign employer**.

***Explanation* I**—In the case of a pensioner re-employed, the pay drawn by him in the re-employed post along with the pension originally sanctioned that it is before commutation, if any together with the pension equivalent of the Death-cum-Retirement Gratuity admitted to him as retirement benefit shall be taken as officiating pay for this purpose.

***Explanation* II**—For the purpose of this rule, the expression 'pay' and 'substantive pay' shall not include any special pay.

***Explanation* III**—Whenever the post held in full additional charge is **a post under a foreign employer,** the additional pay shall be borne by the **foreign employer concerned.**

(P.T.O)

(vi) The additional charge arrangement under this rule shall not be made to Group C and D posts / officials. The duties and responsibilities of the vacant post in these categories shall be distributed equally among others in the same cadre or category or post.";

(3) for Clause (2) and the Notes thereunder, the following Clause and the Notes shall be substituted, namely:-

"(2) (a) In addition to the additional pay, the Government servant shall also be permitted to draw **the compensatory allowance in full, attached to any one of the posts, whichever is higher.**

Note 1.—The authority competent to appoint a Government servant to hold additional charge of a post shall declare whether he holds full charge of the other additional post or is appointed merely to discharge the current duties.

Note 2.—No additional pay shall be granted unless the previous incumbent of the other post has actually given over charge thereof under orders of the competent authority. In the case, however, of additional charge of a new post which does not involve handing over charge thereof by the previous incumbent, additional pay shall be admissible subject to the provisions of this Rule, from the date of incumbent signs the certificate of transfer of charge when taking over additional charge of the new post.

Note 3.—Leave not exceeding two months taken by a Government servant holding additional charge of another post shall not be construed as constituting a break in the additional charge arrangement.

Note 4.—No additional pay shall be allowed during any period of vacation, unless the additional duty is performed during such period.

Note 5.—Additional pay shall not be allowed as a matter of course or granted when the extra duties to be performed are only nominal or comparatively light.

Note 6.—Additional pay as defined under ruling (2) under Fundamental Rule 9 (21) (a) shall not count as pay for purposes of calculating compensatory allowances.".

**(BY ORDER OF THE GOVERNOR)**

**S. SWARNA,**
**SECRETARY TO GOVERNMENT .**

To
All Secretaries to Government, Chennai-9.
All Departments of Secretariat, Chennai-9.
The Secretary, Legislative Assembly Secretariat, Chenna-9.

(P.T.O)

The Principal Accountant General (A&E), Chennai-18.
The Accountant General (Audit-II), Chennai-35.
The Accountant General (Audit-II), Chennai-6.
The Principal Accountant General (Civil Audit), Chennai-18.
The Accountant General (CAB), Chennai-9.
The Pay and Accounts Officer(North), Chennai-79.
The Pay and Accounts Officer(south), Chennai-35.
The Pay and Accounts Officer(East), Chennai-5.
The Pay and Accounts Officer, Secretariat, Chennai-9.
All Heads of Department.
All District Collectors.
All District Judges.
All District Magistrates.
The Pension Pay Officer, Chennai-6.
All Treasury Officers.
The Works Manager, Government Central Press, Chennai-79.
(Two copies for publication in the Tamil Nadu Government Gazette)

Copy to:
The Secretary to Hon'ble Chief Minister, Chennai-9.
The Private Secretary to Chief Secretary to Government, Chennai-9.
The Private Secretary to Secretary to Government,
P&AR Department, Chennai-9
All officers / sections in P&AR Department, Chennai-9.
Stock File / Spare Copies.

**// FORWARDED BY ORDER//**

S. Ambika 05/12/2017
**SECTION OFFICER**